දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.
අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617
ලේකම් / செயலாளர் / Secretary: 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846
ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk
ඔබේ අංකය / உமது இல. / Your No. : ..........................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
"இசுருபாயா"
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. : ED/1/9/1/1/04(1)

දිනය / திகதி / Date : 2006.12

**சுற்றறிக்கை இல : 2006/49**

சகல மாகாண கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பாடசாலை பொறுப்பாளர்கள்,
(ஆரம்ப வகுப்புகள் நடைபெறும் பாடசாலைகள்)

## ஆரம்பக் கல்வியின் முதலாவது பிரதான கட்டம் (1 மற்றும் 2 தரம்) களுக்காக புதிய பாடநெறியை அமுல்படுத்தல்

1998ம் ஆண்டு தொடக்கம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்பக் கல்விப் பாடவிதானம் இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட பாடவிதான கொள்கைக்கமைய மீண்டும் ஒரு முறை மறுசீரமைக்கப்பட வேண்டிய காலம் எழுந்துள்ளது. அதன் முதலாவது கட்டமாக 2007ம் ஆண்டு தொடக்கம் ஆரம்பக் கல்வியின் முதலாவது பிரதான கட்டம் (1 மற்றும் 2ம் தரம்) களுக்காக மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. ஆரம்பக் கல்வி மறுசீரமைப்பின் கீழ் அமுல்படுத்தப்பட்ட சுற்றறிக்கை இல. 1998/44 மற்றும் 1998.11.23ம் திகதிய சுற்றறிக்கை இலக்கம் 2000/02 மற்றும் 1999.12.15ம் திகதிய சுற்றறிக்கைக்கு மேலதிகமாக இச்சுற்றறிக்கை 2007ம் ஆண்டு ஜனவரி 01ம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படுகிறது.

03. இதனடிப்படையில் 1998ம் ஆண்டு கல்வி மறுசீரமைப்பின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முதலாவது மற்றும் இரண்டாவது தரத்திற்கான ஆரம்பக் கல்வி வேலைத்திட்டங்களுக்கு கீழ்க் குறிப்பிடப்பட்ட பிரிவுகள் புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன.

(i) இரண்டாவது தேசிய மொழியாக சிங்கள மாணவர்கள் தமிழ் மொழியையும், தமிழ் மாணவர்கள் சிங்கள மொழியையும் கற்றல்.

(ii) நாளாந்தம் 15 நிமிடமாக அமுல்படுத்தப்பட்ட உடற்பயிற்சி வேலைத்திட்டத்தை நாளாந்தம் 20 நிமிடமாக அமுல்படுத்தல்

(iii) சூழல் சார்ந்த செயற்பாட்டு பாடத்துடன் அமுல்படுத்தப்பட்ட செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு வாய்மொழி மூல ஆங்கில வேலைத்திட்டத்தை கணிதப் பாடத்துடன் அமுல்படுத்தல்.

(iv) பகல் உணவு வழங்கும் வேலைத்திட்டத்திற்காக காலத்தை ஒதுக்குதல்.

(v) முதலாவது மற்றும் இரண்டாம் தரத்திற்காக பொது ஆசிரிய கையேட்டுக்கு பதிலாக தயாரிக்கப்பட்ட ஆசிரிய வழிகாட்டல் கோவையை அறிமுகப்படுத்தல்.

(vi) உடற்பயிற்சி செயற்பாடுகள் மதிய உணவு, தேசிய மொழி ஆகிய வேலைத்திட்டங்களுக்காக காலம் அவசியம் என்பதனால் தற்பொழுது நாளொன்றிற்கு நான்கு மணித்தியாலம் 15 நிமிடமாக நீடிக்கப்பட்டுள்ளது.

04. இதனடிப்படையில் ஒவ்வொரு பாடங்களுக்குமாக வாரத்திற்குரிய காலம் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு இருக்க வேண்டும்.

| பாடம் | வாரத்திற்குரிய காலம் |
|---|---|
| 01. தாய் மொழி | 05 மணித்தியாலம் |
| 02. கணிதம் | 03 மணித்தியாலம் 30 நிமிடம் |
| 03. சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் | 05 மணித்தியாலம் 30 நிமிடம் |
| 04. சமயம் | 01 மணித்தியாலம் 15 நிமிடம் |
| 05. இரண்டாவது தேசிய மொழி | 30 நிமிடம் |
| 06. காலைக் கூட்டம் மற்றும் சமய வழிபாடு | 01 மணித்தியாலம் 15 நிமிடம் (ஒரு நாளைக்கு 15 நிமிடம் வீதம்) |
| 07. இடைவேளை | 01 மணித்தியாலம் 15 நிமிடம் (ஒரு நாளைக்கு 15 நிமிடம் வீதம்) |
| 08. உணவு உட்கொள்வதற்காக | 50 நிமிடம் (ஒரு நாளைக்கு 10 நிமிடம் வீதம்) |
| 09. உடற்பயிற்சி செயற்பாட்டிற்காக | 01 மணித்தியாலம் 40 நிமிடம் (ஒரு நாளைக்கு 20 நிமிடம் வீதம்) |
| 10. பாட இணை செயற்பாடுகள் | 30 நிமிடம் (ஒரு கிழமைக்கு ஒரு நாள்) |
| வாரத்திற்கு மொத்த காலம் | 21 மணித்தியாலம் 15 நிமிடம் |

05. மேற்குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டத்தில் நாள் ஒன்றிற்கு உரிய நேரம் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தை தவிர ஏனைய சகல வேளைகளிலும் 30 நிமிடமாகக் கருதி காலத்தை பகிர்ந்துகொள்ள வேண்டும். ஒரு ஆசிரியர் சகல பாடங்களையும் கற்பிப்பதனால் நெகிழ்வுத் தன்மையுடன் இக்காலத்தை பயன்படுத்த ஆசிரியருக்கு சுதந்திரம் இருக்கிறது. அத்துடன் அவ்வவ் பாடங்களுக்காக உரிய காலத்தை வழங்குவது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

06. இதனடிப்படையில் முதலாவது மற்றும் இரண்டாம் தரங்களில் நாளொன்றிற்கு வேலை நேரம் 04 மணித்தியாலம் 15 நிமிடங்களாகும். அவ்வாறாயின் மு.ப. 7.30 தொடக்கம் மு.ப. 11.45 வரையாகும்.

07. இது வரையில் பயன்படுத்தப்பட்ட பாடநூல்களில் எந்தவித மாற்றமும் இடம்பெறாது.

08. முதலாம் தரத்திற்கு பொறுப்பான ஆசிரியர் மற்றைய ஆண்டில் இரண்டாம் தரத்திற்குப் பொறுப்பாக செயற்பட திட்டமிட வேண்டும்.

09. இதற்கு மேலதிகமாக 1998 கல்வி மறுசீரமைப்புடன் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்பக் கல்வி தொடர்பான சகல வேலைத்திட்டங்களும் தொடர்ந்தும் அமுல்படுத்தப்படும்.

10. இரண்டாவது பிரதான கட்டம் (3 மற்றும் 4ம் தரம்) மற்றும் 3வது பிரதான கட்டம் (5ம் தரம்) இற்காக தற்பொழுது அமுல்படுத்தப்பட்டுள்ள உடற்பயிற்சி வேலைத்திட்டதிற்காக ஒதுக்கப்பட்டுள்ள காலம் 15 நிமிடமாகும். இருப்பினும் 2007ம் ஆண்டு தொடக்கம் இவ்வேலைத்திட்டத்திற்காக இக்கட்டங்களுக்கு 25 நிமிடம் ஒதுக்கவேண்டும். இவ்வாறு மேலதிகமாக சேரும் 10 நிமிட நேரம் இக்கட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள 30 நிமிடமான இடைவேளையிலிருந்து பெறவேண்டும். இதனடிப்படையில் இக்கட்டத்திற்காக உடற்பயிற்சி செயற்பாடுகளுக்காக காலம் 25 நிமிடம் மற்றும் இடைவேளைக் காலம் 20 நிமிடமாக மறுசீரமைக்கப்படும்.

ஆரியரத்ன ஹேவகே
செயலாளர்,
கல்வி அமைச்சு.